*1975 அக்டோபர் 27]*

*Shops for distribution of food grains.*

*73 Q.—THIRU K. M. SUBRAMANIAM AND THIRU L. GANESAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of shops run by the Tamil Nadu Civil Supplies Corporation in the Madras City; and

(b) the maximum number of ration cards attached to a shop?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) சென்னை நகரில் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் 240 கடைகளைத் திறந்துள்ளது. பெரும்பாலும் ஒவ்வொரு கடைக்கும் 2,000 அட்டைகளுக்குள் ஒதுக்கப்பட்டுள்ளன.

THIRU K. M. SUBRAMANIAM: Does this Government consider that 2,000 cards per shop is very high and it is very difficult to be handled and a big queue is standing always before these shops? Can they think of extending the number of shops further?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே இதைவிட அதிகமாக இருந்தது. இப்போது நாம் திட்டமிட்டு கொஞ்சம் குறைத்திருக்கிறோம். இதிலே நிர்வாகச் செலவு பிரச்னையாக இருக்கிறது. பொது மக்களுக்கு ரேஷன் பெறுவதில் கஷ்டங்கள் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போன்று இருக்கத்தான் செய்கின்றன.

திரு. ஆ. பரந்தாமன் : சென்னை நகரத்திலே உள்ளவர்களில் சிலர் அதிகாரிகள் வருகிறபோது சரியான தகவல் கொடுக்க முடியாதபடி—அவர்கள் ஊரில் இல்லாத காரணத்தினாலேயோ அல்லது வேறு காரணத்தினாலேயோ—இருந்த காரணத்தால் அவர்களுக்கு எல்லாம் நியாயமான முறையில் கார்டுகள் கிடைக்கவில்லை. இதிலே அதிகப்படியாக காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு எல்லாம் விரைவிலே கார்டுகள் கிடைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் பிரச்னை இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. நாம் சென்ஸஸ் போட்டு இந்தப் பிரச்னையெல்லாம் தீர்த்து இருக்கிறோம். ஒன்றிரண்டு அப்படி இருக்குமானால் அதைப்பற்றித் தகவல் கொடுத்தால், பரிசீலனை செய்யலாம்.

[1975 அக்டோபர் 27

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இந்த சிவில் சப்ளைஸ் கடைகளைப் பொறுத்தவரையில் அங்கே ஊழியர்களை நியமிக்கும் போது எம்ப்ளாயிமெண்ட் எக்சேஞ்ச் மூலமாக நியமிக்கப் படவில்லை என்று தெரிகிறது, என்ன காரணம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேண்டாம், அது இதிலே வராது. அட்டைகள் பற்றி தான் கேள்வி.

**திரு. கு. காமாட்சி:** இப்போது ஒரு கடைக்கு 2,500 கார்டுகள் என்று இருப்பதால் பெரிய நீண்ட க்யூக்கள் இருக்கின்றன. 2,500 என்று இருப்பதை ஐந்தாகப் பிரித்து ஒரு நாளைக்கு இத்தனை கார்டுகளுக்கு வழங்கலாம் என்று உத்திரவு போட்டால் பிரச்னையை எளிதாக்கலாம் என்பதால் அரசு அதுபற்றி ஆலோசிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அது பொது மக்களுக்கு இடையூறாக இருக்கும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே இருக்கிறவர்கள் வேலைக்குப் போவதற்கு வெகு நேரத்திலேயே கிளம்ப வேண்டியிருக்கிறது அவர்களுக்குப் பல்வேறு தொல்லைகள் இருக்கின்றன, 2,500 கார்டுகள் என்பதை குறைவாக வைக்க அரசு முன்வருமா? இப்படி அதிகமாக இருப்பதால் அவர்கள் கடைகளுக்குச் சென்று சாமான்கள் வாங்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, அந்த எண்ணிக்கையைக் குறைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படிப்பட்ட நிலை சென்னையிலே இல்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** இப்போது சமயத்திலே அறுவடை ஏற்பட்டதாலும் தானிய வரத்து இருப்பதாலும் ரேஷனில் போடக்கூடிய அளவை அதிகப்படுத்துவதற்கு உத்தேசமிருக்கிறதா? போகஸ் கார்டுகளைப் பிடிப்பதற்கு ஸ்லோ ஸ்டெப்ஸ் எடுக்கப்படுகின்றன, அதை வேகமாக எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** போகஸ் கார்டுகளை வைத்து தவறு செய்தவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுத்ததை மக்கள் பாராட்டுகிறார்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1975 அக்டோபர் 27]

**திரு. கே. டி. கே. தங்கமணி:** போகஸ் கார்டுகளைப் பயன்படுத்தக்கூடிய வகையிலே 240 கடைகளிலே ஒவ்வொரு கடையிலும் எத்தனை போகஸ் கார்டுகள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா ? அவை பயன்படுத்தப்பட்டிருக்கிறதா ? அல்லது பயன்படுத்தப் படாமல் வைத்திருக்கப்பட்டதா ? இதையெல்லாம் செக் அப் செய்திருக்கிறார்களா ? அப்படி செக் அப் செய்தால் பயன்படுத்தப் படாமல் இருக்கிற கார்டுகளையெல்லாம் வேறு இடங்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்வது பற்றி அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** போகஸ் கார்டு என்று சொல்கிறபோதே பயன்படுத்தியிருக்கிறார்கள் என்ற நிலைமை தான். ஒவ்வொரு கடையிலும் மொத்தம் இரண்டாயிரத்து சொச்சம் கார்டுகள் என்று இருக்கின்றன. போகஸ் கார்டுகள் ஆள் இல்லாமல் வாங்குவது என்ற முறையிலும் இரண்டு தவணை வாங்குவது என்ற முறையிலும் இருக்கின்றன. சில வியாபாரிகள் ஆர்கனைஸ்டாகச் செய்கிறார்கள். பலபேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சில பேர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

* 74 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the average number of family cards allotted to the distributing agencies in Kanyakumari district; and

(*b*) the number of the Co-operative Societies among the distributing agencies?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) 929.

(இ) 354.

**திரு. என். டென்னிஸ்:** சராசரி கணக்கு இவ்விதமாக இருந்தாலும் சில இடங்களிலே 2,500 வரை இருக்கிறது. அதனால் வீடுகள் பரவலாக இருப்பதால் மூன்று, நான்கு மைல் தூரம் கடந்து சென்று வாங்க வேண்டியிருக்கிறது. விநியோகம் சரியாக இல்லை. இதைத்தவிர ஒரு சொசைடியின்கீழ் சப் டிப்போக்கள் இருக்கின்றன. மார்க்கெட்டிங் சொசைடியின்கீழ் 50 கடைகள் வழங்கி வருகின்றன. அப்படி இருப்பதால் ஒரு மோனுபொலியாக நடக்கிறது. டிஸ்ட்ரிப்யூஷன் ஒழுங்காக இல்லை. இந்த